221

முதியோர் கல்வி

மலர் 1] மே 1952 [இதழ் 10

231
3.52

இந்திய முதியோர் கல்வி சங்க நிர்வாக காரியதரிசி திரு. வி. எஸ். மாதூர் சென்னை விஜயம்.

இந்திய முதியோர் கல்வி சங்க நிர்வாக காரியதரிசி திரு. வி. எஸ். மாதூர் 26-ந்தேதியன்று தென் னிந்திய முதியோர் கல்வி சங்கத்திற்கு விஜய செய்தார். அவ்வமயம் முதியோர் கல்வி தொண் களுடனும் தென்னிந்திய முதியோர் கல்வி ச நிர்வாக காரியதரிசியுமான திரு. டி. ஜே. ஆ கோபால் அவர்களுடனும் முதியோர் கல்வி வ இந்தியாவில் எப்படி நடைபெறுகிறது என்று முதியோர் கல்வி பிரசாரம் முதலிய முக்கி பிரச்னைகளைப்பற்றி பேசினர்.

வருகிற அகில இந்திய முதியோர் கல்வி மகா நாட்டின் தலைவராக திரு. ஜி. ஹரிசர்வோத்தம ராவ் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என அவர் மேலும் கூறினர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 JUL 1952

தென்னிந்திய முதியோர் கல்வி சங்கம் சென்னை. 1

பொருள் அடக்கம்

முதல் பகுதி — பக்கம்

ராஜாஜி வாழ்க!	...	...	...	175
எட்டாவது தென்னிந்திய முதியோர் கல்வி மகாநாடு	...		...	176
முதல் ஆண்டு அறிக்கை—தஞ்சை தாலுக்கா முதியோர் கல்வி ஊழியர் கழகம்	...	...	...	177
அசோகா சங்கம், சென்னை		...	...	180
நமது தபால் பெட்டி	...	...	...	181
படிப்பின் மகிமை	...	...	...	182
செய்தி சுருள்		...	...	185

இரண்டாம் பகுதி

தமிழ் மக்கள்	...	...	...	188

மூன்றும் பகுதி

மாதர் பகுதி	...	...	...	190
முதியோர் கல்வி கீதம்	...	...	...	191

"ஆனந்தம்"

(வாரப் பத்திரிகை)

ஆனந்தம் என்னும் வாரப் பதிப்பு, புதிதாக படிக்க எழுதத்தெரிந்த மக்களுக்கு கதை, கட்டுரை செய்திகள் மூலமாகவும், ஜாதி, மத, வேறுபாடு அன்றி, குறைந்த விலையில் அதிகப் பக்கங்களுடன், கல்வி பொக்கிஷத்தை அளிக்கும் ஒரே குறிக்கோளுடன் விரைவில் வெளிவருகிறது.

8 பக்கங்கள்

வருட சந்தா ரூ. 1-8-0 — தனிப்பிரதி விலை ½ அணா

— விபரங்களுக்கு —

சப்ஸ்கிருப்ஷன் மானேஜர்,

"ஆனந்தம்",

C/o. தெ. இ. மு. கல்வி சங்கம்,

2/21, முதல் லைன் பீச், சென்னை-1.

பிப்ரவரி மாதம் 3-ந் தேதி சென்னை அசோகா சங்கத்தாரால் நடத்தப்பட்ட முதியோர் கல்வி பிரசார ஊர்வலத்தில் தென்னிந்திய முதியோர் கல்வி சங்க நிர்வாகக் காரியதரிசி திரு. கோபால், அசோகா சங்க காரியதரிசி திரு. டி. நீலகண்டன், திரு. திருஞான சம்பந்தம் ஆகியோரும், பல மாணவர்களும் கலந்து கொண்டனர்.

முதியோர் கல்வி

(தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கத்தின் மாத இதழ்)

தனிப்பிரதி அணு 3 | வருட் சந்தா ரூ. 2

மலர் 1 | மே 1952 | இதழ் 10

224716

ராஜாஜி வாழ்க!

ராஜாஜி இந்த தள்ளாத வயதிலும் கூட நாட்டிற்கு நலம் நல்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் நம் ராஜ்யத்தின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார். இன்று அவர் நம் ராஜ்யத்தின் முதன் மந்திரி. அவர் பல பெரிய பதவிகளை வகித்திருக்கின்றார். ஒவ்வொன்றையும் வெகு திறமையுடன் நிர்வாகம் செய்திருக்கின்றார். இப்பதவி அவருக்கு புதியதும் அல்ல பெரியதும் அல்ல.

அந்நியன் ஆண்ட காலத்தில் காங்கிரஸ் சார்பில் 1938-ம் ஆண்டில் நம் ராஜ்யத்தின் பிரதமராக இருந்து நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய அநேக திட்டங்களை வகுத்து திறமையுடன் நிர்வகித்திருக்கின்றார். பிறகு அரசியல் நெருக்கடியினால் காங்கிரஸ் மகா சபையின் உத்திரவுக்கிணங்கி வெளியேறினார். அன்றிலிருந்து அவரால் ஆக்கப்பட்ட திட்டங்கள் ஒவ்வொன்றும் இன்றுவரை வெற்றியடைந்து வருகிறது.

ராஜாஜி முதன் மந்திரியாக நம் ராஜ்யத்தில் பதவி ஏற்றவுடனே கெஜட் பதவியில்லாத அரசாங்க சிப்பந்தி (Non Gazetted Officers) களின் குழந்தைகளுக்கு எட்டாவது வகுப்பு வரையிலும் இலவச கல்வி அளிக்க ஏற்பாடு செய்து இருப்பதை நாங்கள் வரவேற்கிறோம்! வாழ்த்துகிறோம்!! இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான குழந்தைகளுக்கு நம் ராஜ்யத்தில் இலவசக் கல்வி போதிக்கப்படும். ஆனால் கல்வி போதிக்கும் உபாத்தியாயர்கள் அரசாங்க சிப்பந்திகளாக இல்லாவிடில் இவ்வசதி கிடையாது எனவே ஆசிரியர்களின் குழந்தைகளுக்கும் உடனடியாக இவ்விதமான வசதியை அரசாங்கம் அளிக்கும் என நம்புகிறோம். முதியோர் கல்வியில் உழைக்கும் பயிற்சி பெற்ற ஊழியர்களுக்கும் இவ்விதமான வசதி அளிப்பது மிக அவசியம். ஆரம்ப ஆசிரியர்கள் அநேகமாக முதியோர் கல்வி முகாம்களில் வேலை செய்து வருகின்றனர். பகல் நேரங்களில் பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுக்கும், இரவு நேரங்களில் பெற்றோர்களுக்கும் கல்வி கற்பித்து வருகிறார்கள்.

பெற்றோர்கள் கல்வி கற்றால்தான் பள்ளிக்கூடத்திற்கு பிள்ளைகள் வருவார்கள் என்பதை அரசாங்கமே எடுத்துக் காட்டியுள்ளது. அரசாங்கத்தில் கீழ்த்தரப்பட்ட ஊழியர்கள் பல்லாயிரக் கணக்கில் எழுத்தறிவுயில்லாது இருக்கின்றனர். இதன் புள்ளி விவரங்களை அரசாங்கம் முன்கூட்டியே எடுத்திருக்குமென எண்ணுகிறோம். இவர்களின் குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப இலவச கல்வி கொடுக்க நிச்சயித்திருப்பதால் அரசாங்கம் உடனடியாக இவர்களுக்கும் இலவச கல்வி அளிக்க அதிக அக்கரை காட்ட வேண்டும். இவர்களுக்கு பாடசாலைகள் நிறுவி படிப்பிக்க முடியாத காரணத்தினால் அவர்கள் படிக்க ஓய்வு நேரங்களில் ஏற்பாடு செய்ய வேண்டும். முதியோர்கள் கல்வி கற்க வெகு சீக்கிரத்தில் முடியுமென்பதை பல அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

நம் மதிப்பிற்குரிய தலைவரும், முதன் மந்திரியுமான ராஜாஜி அவர்கள் "தம்பி வா" என்ற முதற் புத்தகத்தை 1938-ல்

எழுதி படியாத மக்கள் யாவருக்கும் படிக்க வேண்டுமென்ற விருப்பத்தினால் இலவசமாக விநியோகித்தார். அதுமட்டுமல்லாது எழுத்தறிவு பெற்றவர்கள் மறுபடியும் அறியாமையாக ஆகக்கூடாது என்ற எண்ணத்தினால் அவரும் திரு. கே. சந்தானமும் "ஊருக்கு நல்லது", "இதையும் படி" என்கின்ற இரு புத்தகங்களை வெளியிட்டுள்ளனர். எனவே ராஜாஜி முதியோர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதை காண்கிறோம். அவர் எழுதிய புத்தகத்திலிருந்து முதியோர் கல்வி என்றால் சாதாரண எழுத்தறிவுமட்டுமல்லாது ஒவ்வொருவரும் தன்னைத்தானே உயர்த்திக் கொள்ளவேண்டும் என்ற சக்தியுள்ளவனாக ஆக்கப்படவேண்டுமென்று தெரிகிறது.

1940-ல் இரண்டாவது தென்னிந்திய முதியோர் கல்வி மகாநாட்டில் "முதியோர் கல்வி" முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டி தானே இதில் தொண்டு செய்து வருகிறேன் என ராஜாஜி அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்.

ராஜாஜி முதியோர் கல்வி பற்றுள்ளவர் என்பது நன்றாகத் தெரிகிறது. முதன் மந்திரியாக இருக்கும் ராஜாஜி அவர்கள் இதில் தீவிரமாக ஈடுபட்டு நம் ராஜ்யத்தில் கல்வியின்மையைப் போக்க பரிபூரணத் தொண்டு புரிவார் என்று நம்புகிறோம்.

எட்டாவது தென்னிந்திய முதியோர் கல்வி மகாநாடு

தென்னிந்திய முதியோர் கல்வி சங்கத்தின் 8-வது மகாநாடு 1952-ம் ஆண்டு மே மாதம் 18-19-ந்தேதிகளில் கோழிக்கோடில் திரு. எல். எம். பைலி, எம். எல். ஏ., முன்னாள் திருவாங்கூர்-கொச்சி அரசாங்க கல்வி அமைச்சர், தலைமையில் நடைபெறும்.

அவ்வமயம் நம் சென்னை ராஜ்யத்தின் கல்வி மந்திரி டாக்டர் எம். வி. கிருஷ்ணராவ், மகாநாட்டை துவக்கி வைப்பார்கள். திருவாங்கூர், மைசூர், ஹைதராபாத், ஏனைய இடங்களிலிருந்தும், சென்னை ராஜயத்திலிருந்தும் பல பிரதிநிதிகள் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

நம் நாட்டிற்கு முதியோர் கல்வியின் அவசியத்தை, மக்களையும், அரசாங்கத்தையும் உணர வைத்து, அதில் தீவிர அக்கரை காட்ட திட்டங்கள் வகுக்க ஆராய்ச்சி செய்வார்கள்.

தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் இவ்வியக்கத்திற்கு அளவு கடந்த ஆதரவு அளிப்பார்கள் என நம்புகிறோம்.

(188-ம் பக்கத் தொடர்ச்சி)

5. ராஜாஜியால் எழுதப்பெற்ற மூன்று முதியோர் கல்வி புத்தகங்களை மிகவும் எளிய விலையில் வெளியிட்டு அவைகளை அந்த உரிமையுள்ள கம்பெனியிடமிருந்து கடித போக்குவரத்து வைத்து திரு. பி. எஸ். கந்தசாமி அவர்கள் கமிட்டிக்கு அதனுடைய பலனை கூறவேண்டுமென கேட்டுக்கொண்டு கீழ்க் கண்டவர்களையும் கமிட்டி அங்கத்தினராக சேர்த்துக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

1. மதுரை ஜில்லா கூட்டுறவு சங்கங்களின் ரிஜிஸ்தரார்.

2. மதுரை ஜில்லா கூட்டுறவு சங்கங்களின் உதவி ரிஜிஸ்தரார்.

3. மதுரை ஜில்லா பஞ்சாயத்து போர்டு அதிகாரி

4 மதுரை ஜில்லா பஞ்சாயத்து போர்டு உதவி அதிகாரி.

5. திரு. எஸ். கே. குப்புசாமி, பி. ஏ., எல். டி.

6. ஜே. ஜே. முத்தையா, மதுரை.

முதியோர் கல்வி பிரசாரம்

திண்டுக்கல் டவுன் நாகல் நகரில் நடந்த பெருமாள்கோவில் திருவிழாவில் 1-4-52 முதல் 10-4-52 வரை முதியோர் கல்வி சம்பந்தமான கண் காட்சி ஒன்று, சேலாங் கேணி தெரு, நகராட்சி முதியோர் கல்வி பாடசாலையின் சார்பாக ஆரம்பிக்கப்பட்டு, பொது ஜனங்களுக்கு விளக்கிக் கூறப் பட்டது. 10-4-'52 தேதி, இரவு ஷை பள்ளி ஆசிரியர் திரு. என். ராதாகிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்ட படியாதபட்டு ' என்ற இசை நாடகம், திண்டுக்கல் ஹிந்தி ஆசிரியர்கள் திரு. குருமூர்த்தி, சுந்தரராமன் அவர்களின் உதவியால் மிகவும் விமரிசையாக நடத்தப் பட்டது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் ரஸித்தனர்.

மக்கள் கல்வியே நாட்டின் செல்வம்!

முதல் ஆண்டு அறிக்கை
தஞ்சைத் தாலூக்கா முதியோர் கல்வி ஊழியர் கழகம்
தஞ்சை, 27–4–1952.

நாட்டின் இன்றைய நிலை :—"முயற்சி திருவினையாக்கும்" என்பர் மேலோர். இப்பாரத நாட்டின் அருந்தவப் புதல்வர்களான நாம், நாட்டின் நலனே நற்பணியெனக்கொண்ட உண்மை தொண்டர்களின் ஒப்பற்ற தியாகத்தின் பயனாய், அடிமைத் தளையினின்றும் விடுபட்டு சுதந்திர மக்களாய்த் திகழ்கின்றோம் கடந்த ஐந்து ஆண்டுகளாக.

சுதந்திரம் பெற்ற நாள் முதல், காலம் உருண்டோடியும் நம் இன்னல்கள் நம்மை விட்டு விலகவில்லை. நாடு தழைத்து ஒவ்வொருவரும் சுகமென வாழ்ந்து கல்வியறிவும் ஆற்றலும் பெற்று நம் கடமைகளை கவலையின்றி செய்ய சந்தர்ப்பங்கள் கிட்டவில்லை. மக்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு மேம்பாடுகளைக் காணலாம். எவ்வகையிலேனும் மேம்பாடில்லாத ஒருவன் மனித வகுப்பிலே கிடையாது என்பது திண்ணம். என்றாலும் பலர் தங்களிடத்து இயற்கையாகவே அமைந்துள்ள வலிமையை உணராது, தங்களைத் தாங்களே ஒன்றுக்கும் உபயோகம் அற்றவர்களான இழிவு கற்பித்துக்கொண்டு ஒருவித குறிக்கோளுமின்றி, தங்கள் வாழ் நாளை பாழ் படுத்திக் கொள்ளுகின்றனர். மற்றும் பலர் பிறப்பிலேயே உயர்வு, தாழ்வு உண்டென மதித்து மேன்மை யடைய வழி தேடாது, எல்லாம் விதிப்பயன் என்று வாளாவிருக்கின்றனர். பாரியையும், ஓரியையும் பெற்ற நாட்டிலே மக்கள் அறிவின் துணைசெல்ல தயங்குகின்றனர். குமணனைக் கொண்ட இந்நாடு பிறரின் உதவியை நாடுகின்றது.

கல்வியின் அவசியம் :—கல்வியறிவையும், கேள்வியறிவையும் அனுபவ அறிவாக ஏற்றுக் கொள்கின்றவனே அறிவாளியாகிறான். அறிவை யுண்டு இன்புறுவர் அறிஞர் என்பர். ஆகவே நாட்டில் ஏற்பட்டுள்ள எழுத்தறியாமை என்ற கொடிய நோய் அகற்றப்பட வேண்டும். இல்லையேல் மக்கள் சுதந்திரம் பெற்றவர்கள் என்பது பேச்சளவாகவே யாகும்.

சமீப காலத்தில் பல காரணங்களால் நம் நாடு, கல்வி கேள்விகளிலும், நாகரீகத்திலும் பண்பாட்டிலும் பல நாடுகளைவிட பிற்போக்கடைய ஆரம்பித்தது தற்போதுள்ள நிலையில் மக்களில் நூற்றுக்குப் பன்னிருவரே எழுத்தறிவு பெற்றுள்ளனர். பெண்களில் மூவர் கூட எழுதப் படிக்கத் தெரிந்தவர்களல்லர். நாற்பது கோடி மக்கள் வாழும் இந்நாட்டில் மிகக் குறைந்த அளவினரே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்றுக் கூறுவது வெட்கக் கேடல்லவா! ஜனநாயக முறையில் அரசியல் அமைத்து ஆளப்பிறந்த நம்முள் பலர் எழுத்தறிவற்றவர்களாக இருப்பதை நாகரீகமடைந்த எவரும்விரும்ப மாட்டார்கள். படியாதவருடைய நிலையைப் படியாத பலரும் நன்கு உணர்ந்திருப்பர். இவர்களுக்கு கண்கள் இருந்தும் கண் மூடிகளாய் வாழ்நாளை வீண் நாளாக்கி மானமிழந்து வாழ்க்கை நடத்துகின்றனர். இந்நிலை மாற வேண்டுமானால் கல்வியறிவு அவசியமெனத் தெற்றென விளங்கும்.

நம் கட்மை :—"எல்லோரும் ஓரினம்
எல்லோரும் ஓர் குலம்"

என்ற பாரதியாரின் கனவை நினைவாக்கச் செய்தல் நம் கடமையல்லவா? நாட்டின் பிற்போக்கு நிலையைத் துரிதமாக போக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுவது அவசியமல்லவா? அகிம்சை, சத்தியம், பிறருக்கு உதவி செய்தல் என்ற நற்பண்புகள் மக்கள் இதயத்தில் உதிக்க வேண்டாமா? அத்ற்காக பாடு படுவது படித்த மக்களின் கடமையல்லவா?

கேட்டைப் போக்கும் வழிகள் :—உலகில் அமைதிக்குக் கேடு சூழும் தீமைகள் பல உண்டு. அவைகளில் குறிப்பாக இங்கே குறிப்பிட வேண்டுவன இரண்டு. ஒன்று வறுமை, மற்றொன்று அறியாமை. ஒருவன் தன் ஆசையைக் கட்டுப்படுத்துவதின் மூலம் போக்கலாம். ஆனால் அறியாமையை, கல்வி பெறும் ஒரு பெரு நிலையை அடைவதன் மூலம்தான் அகற்ற முடியும்.

முதியோர் கல்வித் திட்டம் :— கல்வியறிவை அடைவதற்கும் அதன் மூலம் ஏற்படும் நாட்டின் வளர்ச்சிக்கும் முதியோர் கல்வி ஏற்றவித்தாகும். நம் சுதந்திர நாட்டில் ஜன நாயக தத்துவத்தின் பலனை முற்றும் அனுபவிக்க வேண்டுமென்ற பரந்த நோக்கத்தோடு முதியோர் கல்வி திட்டத்தை மிகத் துரிதமாக அமுல் நடத்த அரசியலார் முன்வந்துள்ளனர். முதியோர்களுக்கு ஓய்வு நேரங்களில், எளிதான முறையில் இலவசமாகச் சொல்லிக் கொடுத்து, எல்லோரும் கல்வி அறிவு பெற்றவர் ஆகவேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

வயது முதிர்ச்சியாலும், குடும்பப் பாரத்தினாலும் தொழிலினால் ஏற்படும் தொல்லைகளாலும், படிப்பு நமக்கு ஏன் ? எனப் பாமர மக்கள் வாளாவிருக்கலாம். ஆயினும் படியாமல் இருப்பதால் ஏற்படும் இன்னல்களையும், அரசியல் அறிவு இன்மையால் ஏற்படும் அவமானத்தையும், பொது அறிவினால் போதிய ஞானமில்லாததால் தாங்கள் அடைந்து வரும் கீழ் நிலையையும் அவர்கள் நன்கு உணர வேண்டும்.

ஆகவே முதியோர் கல்வியின் அவசியத்தையும், பெண்கள் படிப்பதனால் ஏற்படும் நலன்களையும், படியாதவரின் நிலையினையும் படித்த பெரியார்கள் அடையும் நன்மையினையும் எடுத்துக் கையாளுவதே இத்திட்டத்தின் அம்சங்களாகும்.

அறிவுப் பஞ்சத்தைப் போக்கவும், தாய் மொழியில் பற்றுக் கொள்ளவும், அதன் மூலம் அரும் பெரும் இலக்கியங்களில் காணப்படும் அறிவுரைகளையும், அரிய கருத்துக்களையும் சுவைத்து இன்புறுவதற்கான எளிய முறையில் எழுத்தறிவு பெற வழி காட்டிய உயர்திரு லாபாக், உயர்திரு. S. G. தானியேல் முதலிய பெரியார்களின் அருஞ்சேவைகள் பாராட்டத் தக்கதாகும். அன்னாரிடத்தில் காணப்பட்ட தியாக சிந்தையும், நாட்டுப் பற்றும் நம்முள்ளும் தழைத்தோங்கவேண்டும்.

தென் இந்திய முதியோர் கல்விச் சங்கம்:— இது பற்றியே தென்னிந்தியாவில், நாட்டு நலனை பெரிதாகக் கொள்ளும் பல பெரியார்கள் சேர்ந்து முதியோர் கல்வியைப் பரவச் செய்ய ஓர் சங்கத்தை ஏற்படுத்தி நாட்டிலுள்ள கல்வியறிவின்மையைப் போக்குவதற்கான ஆக்க வேலைகளைச் செய்து வருகிறார்கள். இச்சங்கத்தில் ஈடுபட்டு, உழைக்கும் எல்லா தொண்டர்களுக்கும் நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். இவர்களையே தேசத் தொண்டர்களில் மிகவும் சிறந்த தொண்டர்களெனக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் கல்வியே ஒரு நாட்டின் வளப்பத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாகும். இவர்களது முயற்சியாலும், தன்னலமற்ற சேவையாலும் வருங்காலத்தில் நம் நாட்டில் படியாதவர்களே இல்லாமல் செய்துவிடலாம் என்பது எமது துணிவு.

கிராம புனருத்தாரணம் :— ஆரம்பக் கல்வி, முதியோர் கல்வியைத் துணை கொள்ளாவிடில் அது பூரண வெற்றி பெற இயலாது. படித்த பெற்றோர்களே, தம் மக்களின் படிப்பில் அக்கரை காட்ட முடியும். ஆதலால் எழுத்தறிவில்லாதவருக்கு கல்வி புகட்டுவதற்காக படித்தவர்களை ஒன்று திரட்டவேண்டும். படித்தவர்களைக் கட்டாய சேவை செய்ய திட்டமிட வேண்டும். இப்பெரும் வேலையில் பொது மக்கள் ஒத்துழைப்பும், கூட்டுறவும் எவ்வளவு அவசியம் என்பது யாம் சொல்லாமலே விளங்கும்.

நம் பாரத நாடு கிராமங்கள் நிறைந்த நாடு. எனவே கோடிக்கணக்கான கிராம மக்களின் நல் வாழ்க்கையில்தான் நம் நாட்டம் செல்ல வேண்டும். கிராம புனருத்தாரண வேலையில் முக்கியமானதும், முதன்மையானதும், எழுத்தறிவின்மை என்னும் அரக்கனை ஒழிப்பது தான். முதியோர் கல்வித் திட்டம் மிகுந்த பரந்த கொள்கையையும், தேசியத் தன்மையையும் கொண்டது. இன்று இத்திட்டம் பூரண தொண்டாற்றுமாயின், விடாமுயற்சியுடன் உழைக்குமாயின், நாம் வசிக்கும் பாரத நாட்டின் சுதந்திரத்திற்கு மட்டுமல்ல, அண்ணல் காந்தியாரின் கனவை நினைவாக்க மட்டுமல்ல, இந்நிலவுலகிலே நம் நாட்டின் புகழ் ஓங்குவதற்கும் உதவும்.

ஆக்க வேலைகள் :— முதியோர் கல்வித் திட்டம் பயனுற வட்டங்கள் தோறும் அரங்குகளும், பயிற்சிசாலைகளும், தோற்றுவித்தல் வேண்டும். தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை நன்கு போற்ற வேண்டும். புத்தகாலயங்கள் பல தோற்றுவிக்க வேண்டும். சமூக உணர்ச்சியை ஊட்டக் கூடிய எல்லாவித ஏற்

பாடுகளும் செய்ய வேண்டும். ஏற்படுத்தப் படும் கலா நிலயங்களில் முதியோர்களின் விருப்பங்களை திருப்தி படுத்தக் கூடிய எல்லா அம்சங்களும் இடம்பெறல் வேண்டும். (Community Centre) படித்தவர்கள் பெருந் தனக்காரர்கள், பெரும் நிலக்கிழவர்கள், கௌரவ உழைப்பாளிகள் ஆகியோரின் கூட்டுறவைக் கொண்டு திட்டம் வெற்றிபெற வழி காணல் வேண்டும்.

தஞ்சையின் சிறப்பு :—"பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு" என்று பாடியுள்ளார் பாரதியார். அத்திரு நாட்டின் தென் பகுதியிலுள்ள சோழ வளநாடு தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது. அத்தகைய நாட்டிற்குத் திலகமாயுள்ளது நம் தஞ்சையின் பதி. இப்பதியின் அகன்ற வீதிகளும், உயரமான மாடமாளிகை கூட கோபுரங்களும், சரித்திர கலா விசேஷங்களைப் பெற்றுள்ளதென்பர். கல்வி கேள்விகளிலும், நாகரீகத்திலும் சிறந்தவர்களே இங்கு வசித்து வருகின்றனர் என்பர். கலை விளங்கத் தஞ்சைப் பெரிய கோவில் காட்சியளிக்கிறது. அறிவுத் திறன் விளங்க சரபோஜி மன்னனின் புத்தகாலயம் பயன்படுகின்றது. எல்லா நலன்களும் பெறக் கலைக் கோவில் நாயக்கர் மன்றத்தில் அறிஞர்களால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியின் சிறப்பை காவியங்களும், ஓவியங்களும் எடுத்துக் கூறுகின்றன.

ஊழியர் கழகத் தோற்றம் :—மகாத்துமா காந்தியண்ணல் வகுத்த புனத்தாரண திட்டத்தில் ஞானத்திற்கு அச்சாணியாக உள்ள எழுத்தறிவின் அவசியத்தைப் புரட்சிகரமாக காட்சியளித்தல் வேண்டுமெனவும், இப்புரட்சி இயற்கையாக இயங்க வேண்டுமெனவும், உறமும், உறுதியும், இன்பமும் பெற்று வாழவும், நற்குடி மக்களாகத் தங்கள் கடமைகளைச் செய்ய பழக்க வேண்டும். என்பன போன்ற பெரு நோக்குடன் இவ் ஊழியர் கழகம் நிறுவப்பட்டது.

கழகத்தின் நோக்கம் :—இத்தஞ்சை தாலுக்காவில் பல முதியோர் கலா நிலையங்கள் தோன்றியும், சில மறைந்தும் வந்துள்ளன கலா நிலையங்களுக்கு வரும் முதியோர்களின் எண்ணிக்கையும் தேர்ச்சியும் பாராட்டக் கூடிய விதமாக இல்லாமல் இருந்தன. இக்காரணமாக ஊழியர்களுக்குள் மனச்சோர்வு ஏற்பட்டு வந்தது. இக்குறைகளை நீக்கவும் ஊழியர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் மனதிலுள்ளவைகளை மாற்றிக் கொள்ளவும் கலா நிலையங்களிலுள்ள பாடதிட்டங்கள் ஒரு முகமாக அமைக்கப்பட்டு நடத்தப்படவேண்டுமெனவும் முதியோர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யவும் பிரசாரக் கூட்டங்களுக்கு எல்லோருடைய ஒத்துழைப்புகிடைக்க வேண்டுமெனவும், ஊழியர்களில்பலர் கருதியபடியால் 29-4-'52 பகல் 10 மணிக்கு தஞ்சை குரிச்சித் தெரு முனிசிபல் பாடசாலையில் உயர்திரு. G. தேவ இரக்கம் அவர்கள் தலைமையில் இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

இச்சங்கம் கொண்டுள்ள தொடர்புகள் :— இச்சங்கம் தஞ்சை தாலுக்கா முதியோர் கல்விச் சங்கம், தஞ்சை ஜில்லா முதியோர் கல்விச் சங்கம், தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கம், வாலிப உல்லாச உடற் பயிற்சி சங்கம், கல்வி இலாக்கா அதிகாரிகள், மற்றும் நகர பிரமுகர்கள் பலர் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்று முதியோர் கல்வி வளர்ச்சிக்காக வேலை செய்து வருகிறது.

கழக நடவடிக்கைகள் :—இச்சங்கத்தின் காரியக்கமிட்டிக் கூட்டம், மஹாசபை கூட்டம், பிரச்சார கூட்டம் முதலியவற்றைப் பற்றிய விபரம் பிரிதோர் இடத்தில் இடம் பெற்றுள்ளது.

இச்சங்க ஊழியர்கள் பலன் எதிர்பாராமல் முயற்சியுடனும், ஒற்றுமையுடனும் தங்கள் பணியைச் செய்து வருகின்றனர். மக்களுக்காக மக்களால் ஆக்கப்பட்ட முதியோர் கல்வி இயக்கம் வளரவும், அதன் பயனை வெளிவரும் வெளியீடுகளைப் பாலர், முதியோர் பயன் பெறும் வகையில் வெளியிட்டுப் பிரச்சார வேலைகள் பல புரிந்தும் மக்கள் ஆதரவே தங்கள் உழைப்புக்கும் செழிப்பு எனவும் இப்பணியாளர்கள் தொண்டாற்றி வருகின்றனர்.

எம் வேண்டுகோள் :—இத்தேசியத் திட்டம் நன்கு பயனுற ஆசிரியர்களின் நிலை உயர்த்தப் படவேண்டும். அறிவுள்ளவர்கள் இடம் பெறக் கவர்ச்சியுள்ளதாகச் செய்ய வேண்டும். இதனை சுதேசமித்திரன் தலையங்கம் நன்கு வெளியிட்டிருக்கிறது. கல்விக் கூடம் நன்னெறியின்

சக்தியை அளிக்கவல்லது. ஆதலால் ஆசிரியர்கள் நலனைப் பாதுகாக்க வேண்டிய பொருப்பை பொதுமக்கள் உணரவேண்டும். இதன் கருத்திற்கேற்ப மேன்மை தங்கிய கவர்னர் உயர்திரு. ஸ்ரீ பிரகாசா, அவர்கள் "பண்டை காலத்தில் நம் சமூகத்தில் ஆசிரியர்களுக்கு முதன்மை ஸ்தானம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது அப்படியில்லை. சமூகம் ஆசிரியர்களின் அந்தஸ்தை உணரவேண்டியதவசியம்" என்று கூறியுள்ளதையும் பொதுமக்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறோம்.

நன்றி:—இவ்விழாவினைச் சிறப்புடன் நடைபெறுவதற்கு எங்களுக்கு உதவியளித்த எல்லா பிரமுகர்களுக்கும், இவ்விழாவினிற்குத் தலைமை தாங்கிய உயர்திரு. ஏ. கோபாலன் அவர்களுக்கும், பொருளுதவி செய்த தஞ்சை ஜில்லா முதியோர் கல்விச் சங்கம், தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கம் பிரச்சாரவேலையில் எங்களுக்கு உதவியளிக்க முன்வந்துள்ள வாலிபர் உல்லாச விளையாட்டு கழக அங்கத்தினர்களுக்கும், ஆண்டு விழா சிறப்புற நடப்பதற்கு உற்ற துணையாயிருந்து உதவிய எல்லா ஆண்டு விழா செயற் குழு உறுப்பினர்களுக்கும் இம்மைதானத்தை உபயோகிக்க அனுமதி கொடுத்து உதவிய கலியாணசுந்தரம் உயர்நிலைப்பள்ளி ஆனையாளர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றி உரித்தாகுக!

இப்பகுதியிலுள்ள பெரியார்கள் பலர் கல்வி வளம் காணப்பெரிதும் உழைத்து வருகின்றனர். யாங்களும் உழைப்போம்! ஒன்றுபடுவோம்!! ஓதுவோம் அனைவருக்கும் கல்வியை!!!

ஊழியர்கள் அனைவரும் ஊக்கமும் உற்சாகமும் குன்றாது உழைத்துவர எல்லா இலாகாக்களும் முதியோர் கல்விச் சங்கங்களும், முதுகெலும்புபோல் இருந்து எங்களுக்குத் துணை புரியும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வியக்கம் எடுத்துக்கொண்ட திட்டம் நிறைவேற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

வணக்கம்

"நாற்பது நாட்களில் நன்றாய் படிக்க
நூற்பல கற்று நுண்ணறிவுபெற
ஆற்றும் செயலில் அரும்பணி செய்ய
போற்றி உழைக்கப் புறப்படுவீரே"

சுபம்.

G. தேவஇரக்கம்,
தலைவர்.

A. R. சுப்ரமண்யம்,
N. வீரராகவலு,
காரியதரிசிகள்.

அசோகா சங்கம், சென்னை.

சென்னை அசோகா சங்கத்தாரால் 1949-ல் ஆரம்பிக்கப்பட்ட இலவச முதியோர் கல்வி பாடசாலை சென்னை கார்ப்பரேஷன் அதிகாரிகளின் உதவியால் முத்தியால்பேட்டை டிவிஷனில் உள்ள கார்ப்பரேஷன் பள்ளியில் நடந்து வருகிறது. முதியோர்களுக்கு பாடம் ஒரு பயிற்சிப் பெற்ற ஆசிரியரால் நடத்தப்பட்டு வருகிறது.

மேற்படி சங்கத்தாரால் பிப்ரவரி மாதத்தில் நடத்தப்பட்ட முதியோர் கல்வி பிரசார ஊர்வலத்தில், தென்னிந்திய முதியோர் கல்வி சங்க நிர்வாகக் காரியதரிசி திரு. கோபால், அசோகா சங்க காரியதரிசி திரு. டி. நீலகண்டன், திரு. அ. திருஞான சம்மந்தம் (சென்னை நகர முதியோர் கல்வி சங்க பொது காரியதரிசி, ஆகியோரும், அதில் தீவிரப் பற்றுள்ள பல மாணவர்களும் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் சுமார் 60 முதியவர்கள் கலந்து கொண்டு, முதியோர் கல்வி இயக்க விளம்பரங்களும், பாட்டுகளும் பாடிக் கொண்டு பல முக்கியமான தெருக்கள் வருயாக சென்று கடைசியில் ஜார்ஜ் டவுனில் உள்ள சங்கத்தின் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

அவ்வமயம், திரு. டி. ஜே. ஆர். கோபால் அவர்கள் முதியோர் கல்வியின் முக்கியத்வத்தை பற்றி பேசினர்.

அசோகா சங்கக் காரியதரிசி திரு. டி. நீலகண்டன், சமூக நல்வாழ்வு மன்றங்கள் ஏற்படுவதால் உள்ள பலன்களையும், அதனால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகளையும் பற்றி பேசி, முதியோர் கல்விதான் இன்று நம் பாரதநாட்டின் அறியாமையை உடனடியாக போக்க சிறந்த சாதனம் என கூறி முடித்தார்.

பின்னர் காரியதரிசி வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிந்தது.

நமது தபால் பெட்டி

தாலுக்கா, முதியோர் கல்வி கமிட்டியார் கவனித்து செய்ய வேண்டிய சலுகைகள்.

---

1. முதியோர் கல்வி பாடசாலைகளுக்கு ஒவ்வொரு மாதமும் மாணவர்களுக்கு போதிக்க வேண்டிய பாட திட்டங்கள் (சிலபஸ்) ஜில்லா காரியாலயத்திலிருந்து வர வேண்டும்.

2. ஒவ்வொரு முதியோர் கல்வி பாடசாலைக்கும் உபகரணங்கள் உடனடியாக சப்ளை செய்ய வேண்டும்.

3. குறைந்தது வருஷத்தில் 3 அல்லது 4 முறையாவது தாலுக்காவிலுள்ள முதியோர் கல்வி பாடசாலைகளை நடத்தும் ஆசிரியர்களை ஒன்றுக்கூட்டி தாலுக்கா முதியோர் கல்வி கமிட்டித் தலைவர் அவர்கள் தலைமையில் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

4. மாதா மாதம் ஆசிரியர்களுக்கு சம்பளம் பட்டுவாடா செய்ய வேண்டும்.

5. கமிட்டியார் கொடுக்கும் குறைந்த சம்பளத்தையும் 4 அல்லது 5 மாதம் பொருத்துக் கொடுப்பதினால், ஆசிரியர்களுடைய ஊக்கக் குறைவுக்கு காரணமாய் இருப்பதும் அல்லாமல், அவர்களுடைய நோக்கமும் ஊக்கமும் குன்றி போகிறது.

6. ஒவ்வொரு முதியோர் கல்வி பாடசாலைக்கும் இரண்டு (அரிகன் லைட்) சப்ளை செய்ய வேண்டும்.

7. ஒவ்வொரு தாலுக்காவிலும் நன்றாக கல்வித் திறனும், அநுபவமும் உள்ள ஒருவரை நியமித்து, அடிக்கடி பள்ளியை பார்வை செய்து, இதனால் ஏற்படும் நன்மை தீமைகளை எடுத்துச் சொல்ல வேண்டும் ஆசிரியர்களுக்குப் பாதகம் ஏற்படாமல், கிராமாந்தரங்களில் ஏற்படும் கஷ்டங்களை பார்வை செய்து, அதை சீர்திருத்த ஆசிரியர்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டும்.

8. அவ்வப்போது அரசியலார் போட்ட உத்திரவை தாலுக்கா, கமிட்டியார் கையாள உடனடியான முயற்சிகள் செய்ய வேண்டும்.

9. முதியோர் கல்விப் பாடசாலையில் வேலை செய்யும், ஆசிரியர்களில் வருஷத்தில் 2 அல்லது 3 பேரையாவது, தாலுக்கா கமிட்டியார், உடனடியாக முதியோர் கல்வி பயிற்சி பாடசாலைக்கு அனுப்புவதினால் ஆசிரியர்கள் தேவை குறையும்.

10. அடிக்கடி கிராம மக்களுக்கு சுற்றறிக்கை கிராம மணியக்காரர் மூலம் கமிட்டியார் அனுப்பி அவர்களையும் ஆசிரியரோடு ஒத்து உழைக்கும்படி செய்ய வேண்டும்.

11. தாலுக்காவிலுள்ள சில முதியோர் பள்ளியை சர்க்காரில் அங்கீகரிக்க வேண்டும் என்று கமிட்டியார் சிபார்சு செய்கிறார்கள். சர்க்காரிலிருந்து சீக்கிரம் உத்திரவு வராமையால் அப்பள்ளி ஆசிரியரின் சம்பளம் ஒரு வருஷம் வரையிலும் வராமல் இருக்கிறது. அதனால் ஆசிரியரின் ஊக்கமும் குறைகிறது. பள்ளியின் வேலை சரியானபடி நடவாமல் இருக்கிறது. ஆகையால் சர்க்காரிலிருந்து அங்கீகாரம் வரும் வரையிலும் கமிட்டியாரே ஆசிரியருடைய சம்பளம் எண்ணெய் செலவு கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அரியூர்,
14—4—'52.

இங்ஙனம்,
அரியூர் முதியோர் கல்வி தொண்டர்கள்.

படிப்பின் மகிமை

(இரா. தங்கராஜி, பண்ணுருட்டி)

கந்தசாமி முதலியாரின் மனைவி, கண்ணம்மாள் இறந்து சரியாக 2 மாதங்கள் கூட பூர்த்தியாகவில்லை. இதற்குள்ளாக கந்தசாமி முதலியார் "மறு கல்யாணம் செய்துக் கொண்டு இன்பமாயிருக்கலாம் என நினைக்கிறேன்" என்று தன் நண்பர் ஒருவரிடம் கூறிக்கொண்டிருக்கையில், நிலத்திற்குச் சென்று திரும்பி வந்த அவர் மகன் மாதவன், இதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான். பிறகு மனம் மிக வேதனை அடைந்தவனாய் தன் தந்தையிடம் "மறுகல்யாணம் செய்துக் கொள்ளக் கூடாது" என்று வாதாடுகிறான் கோபிக்கின்றான்.

இதனால் அன்பே உருவான தந்தைக்கும் மாதவனுக்கும் மனஸ்தாபம் ஏற்படுகிறது. இதன் முடிவு மாதவன் வீட்டை விட்டு வெளியேறுகிறான்!

பாவம்! மாதவன் தாயைப்பலிக்கொடுத்தது போதாதென்று விதி வீட்டையும் விட்டு வெளியேறும்படி செய்தது!

மாதவன் தன் தாய்மாமன் வீட்டிற்குப் போகிறான். அங்கே அவரைக் காண்கிறான். சோகமே உறுவான மாதவன் தன் வீட்டில் நடந்த அத்தனையையும் கூறிவிட்டு குமிறிக் கொண்டு வந்த தன் பெருமூச்சை சொறிந்தான் அதுமட்டுமா? தாங்கமுடியாத பெருமூச்சுகளுக்கிடையே கண்ணீர் விட்டழுதான். பிறகு தன் மனதில் புதைப்பட்டுக் கிடந்த விஷயத்தைக் கூறினான் மாமனிடம்.

தமக்கையின் மகன் என்ற பாசம் எப்போது ஏற்படும் அவள் தான் இறந்துவிட்டாளே! அதுமட்டுமா? மாதவனின் தாய் இரண்டாவது பிரசவத்தில் விதியின் சதியால் உயிர் நீக்கப்பட்ட பின்பு அவருக்கு மாதவன் மேல் எப்படி பாசம் ஏற்படும்? கொஞ்சம் நஞ்சம் இருந்த பாசம் அத்தனையும் தான் அறுந்து போய் விட்டதே.

"எனக்குப் படிப்பு வாசனையே இல்லாததால் சொந்தமாக ஏதாவது வியாபாரம் நடத்த இயலாது. ஆகையால் எனது நண்பர் கோபாலனுடன் கூட்டாகச் சேர்ந்து, ஏதோ ஒரு வியாபாரத்தை நடத்தி பிழைக்கலாம் என்று நினைக்கிறேன். ஆதலின் எப்படியாவது 200 ரூபாய் கொடுத்தால் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்று தான் சொன்னான் மாதவன்.

மிதியுண்ட நாகம் போல் சீறினார் அவன் மாமன். 'கொஞ்சமும் படிப்பறிவில்லாத நீ பின்பு கொடுத்து விடுகிறேன் என்று கூறுகிறாயே எப்படி கொடுப்பாய்? சம்பளத்தில் அமர்ந்து அதில் மீத்துக்கொடுப்பாயோ? முட்டாள்! என்னிடம் பணம் கேட்க வந்து விட்டான் பெரிய படித்துப் பட்டம் பெற்றவன்போல், போ! போ! என்று விரட்டினார் அவர்.

விதியை நொந்தவனாய் தன்னந் தனியாய் எங்கோ போய்க்கொண்டிருந்தான் கலங்கியக் கண்களுடன். ஆனால் அவன் கண்களிலிருந்து தாரை தாரையாக வரும் தண்ணீர் மட்டும் நின்ற பாடில்லை. அப்போது தான் நினைக்கிறான் 'படிப்பின் மகிமையை' ஆம் மாமா கூறியதுபோல் நான் என்ன படித்தவனா? படித்திருந்தால் நான் இப்படி இந்நிலையில் இருக்கவேண்டியதில்லையே! ஏதோ கொஞ்சமேனும் படித்திருந்தால் அவரிடமே வேலைக்கு அமர்ந்திருப்பேனே. ஏ! பாழாப்போன என் தந்தையே! நீ என்ன துரோகம் செய்து விட்டாய். கண்ணிருந்தும் அதன் பார்வையை இழந்து விட்டேனே. அன்று என்னை அடக்கி, மடக்கி, ஒடுக்க பள்ளிக்குச் செல் என்று கண்டித்திருந்தால், ஒரு பணக்காரரின் மகன், நான் கேவலம் ஒரு பிச்சைக்காரரிலும் கேவலமானவனாக ஆகியிருப்பேனா? ஐயோ! எதிர்காலம் என்னை பயமுறுத்துகிறதே, நான் எப்படி இவ்வுலகில் வாழமுடியும்? எப்படி நானும் ஒரு மனிதன் என்று கூறிக்கொள்வேன்? கேவலம் ஒரு பிச்சைக்காரனாவதற்குக் கூட, ஏதோ சிறிதளவு படித்திருக்க வேண்டுமே அது கூட, என் கையெழுத்துக் கூட போடத்தெரியாத நிலையில் இருக்கும் என்னை பணத்திமிர்க்கொண்ட என் தந்தை இந்நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறாரே, நான் என் தந்தையை என்ன செய்தாலும் தகும்

ஒருவன் மனிதக் கூட்டங்களுள் தன்னையும் ஒரு மனிதன் என நினைக்க வேண்டுமானால், அவன் வாழ்வு வளம்பெற வேண்டுமானால், அவன் வாழ்க்கையில் இன்பமாயிருக்க வேண்டுமானால், அவன் எல்லோராலும் போற்றப்பட வேண்டுமானால், அவன் ‘கல்வி’ என்னும் பொக்கிஷத்தை அன்றே அடைந்திருக்க வேண்டும் என்று தனக்குள்ளாகவே கூறிவிட்டு பாழாப்போன என் தந்தையே! மகனாகிய நான் என் தந்தையாகிய உனக்கு செய்யும் நன்றி ‘நீ பாழாகி, சாகவேண்டும்’ என்பது தான்’ என்று ஆவேசத்துடன் சொல்லிக்கொண்டே மடையைத் திறந்த தண்ணீர் போல் மள மள வென்று வந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டான் மாதவன்.

அப்போது ‘உஹூம், இவ்வளவு தானா உன் பேச்சு இன்னும் இருக்கப்பா. இதோடு விட்டு விடவில்லை. படும் கஷ்டம் அனைத்தும் பின்னால் தான் தெரியும். போகட்டும்...... சின்ன வயதிலேயே பள்ளிக்குப் போகாமே இப்போ ஏம்பா வீணா உடம்பை அலட்டிக்கிறே. போகட்டும் தொண்டை வரண்டு போயிருக்கும்...என்னா?...உங்கப்பாவை வாழ்த்தினியே இம்புட்டு நேரம்மா, அதுக்காக இதோ இருக்கும் கொஞ்சம் கட்டிசாதத்தை சாப்பிடு!’ என்று அங்கே இருந்த ஆள் கூறினார். ஆனால் அவர் மரத்தின் பின்னால் அமர்ந்திருந்ததால் அவரை அறிந்துக்கொள்ள இயலவில்லை அவனால்.

களைப்பு நீங்கிய மாதவன் எங்கேயேனும் வேலைக்கிடைக்குமா··என்ற நோக்கத்துடன் தெருத் தெருவாக அலைந்தான். கேட்காத வீடு இல்லை. பார்க்காத ஆபிஸில்லை. எங்கு பார்த்தாலும் படித்தவனுக்கு வேலைக்கிடைக்காத இந்தக் காலத்தில் படிப்பறிவில்லா மாதவனுக்கு எங்ஙனம் கிடைக்கும் வேலை? கொஞ்சமும் நோக்க மின்றி எங்கோ போயிக் கொண்டிருந்தான். அப்போது பளிச் பளிச் சென்று என்னவோ மின்னுவது அவன் கண்களில் பட்டது. கலங்கி இருந்த தன் இரு கண்களையும் கசக்கிக்கொண்டு, அது என்னவாயிருக்கும் என்று உற்றுக்கவனித்தான். அவன் முகம் மலர்ந்தது. ஆம், அது ஒரு தம்படி அளவுள்ள நான்கணா தான்! பரிட்சையில் தேர்ச்சியடைந்தவனைப் போல் மிக மிக உர்ச்சாகத்துடன் அந்த நான்கணாவை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டான்.

பசி மேலும் ஏற்படவே கிடைத்த பணத்தின் பாதி அளவிற்குப் பசி ஆற்றிக்கொண்டு மிகுந்த பணத்தை இருக முடிப்போட்டுக்கொண்டான்.

அந்த ஊர் பெரிய மிராசுதார் சுப்புராம நாயக்கரிடம் ஒரு வேலை ஆளாக அமர்ந்தான். நாட்கள் பல கடந்தன. ஒரு நாள் வீட்டு வேலையாக எங்கோ போய்க்கொண்டிருந்த மாதவன் வெகு தூரத்தில் 2 உருவங்கள் மிக கம்பீரமான தோற்றத்துடன் வருவதைக் கண்டு உள்ளுக்குள்ளேயே பீதி அடைந்தான். போலிஸ்காரர்கள் என்றால் யாருக்குமே கொஞ்சம் பயம்தானே?

மாதவனைக் கண்ட அந்த இரு போலீஸ்காரர்களும் தங்களுக்குள் என்னென்னவோ பேசிக்கொண்டார்கள். பிறகு மாதவனைக் கூப்பிட்டார்கள் அவன் அவர்களை நெருங்கினான். உன் பெயர் என்ன? உன் விலாசம் பூராவையும் தெளிவுடன் சொல் என்று கேட்டார்கள். அவன் சற்று தயக்கத்துடன் மள மள வென்று விலாசத்தைக் கூறினான். உடனே அவர்கள் எழுதிக்கொண்டார்கள். ஆனால் மாதவன் ‘என்னவோ தெரியவில்லை’ என்று பயப்படாமலில்லை.

‘உன்கையில் (0-2-0) இரண்டு அணா இருக்கா என்றார்கள்.

‘எதுக்குங்க ரெண்டணா கேக்கிறிங்க’ என்றான் மாதவன்.

‘லாட்டரி சீட்டு...அதுதான் அதிர்ஷ்டப் பிரைஸ் அதிலே உனக்கு ஒரு சீட்டு கொடுத்திருக்கோம். ரெண்டணாவைக் கொடுப்பா, பயமில்லாமே’ என்று சொல்லிக் கொண்டே சீட்டை அவன் கையில் கொடுத்தார்கள். பணத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பவும் போய்விட்டார்கள்.

மாதங்கள் மூன்று காற்றில் அகப்பட்ட இளவம் பஞ்சு போல் பறந்தோடின. அன்று காலை சுமார் 11 மணி இருக்கும் யாரோ ஒருவர் சுப்புராம நாயக்கர் வீட்டுக் கதவைத் தடதட வென்று· தட்டும் சப்தம் கேட்டு, மாதவன் கதவைத் திறந்தான்; அநேக முணகளுக்கிடையில். வெளியே இருந்த அந்த ஆசாமி ‘மாதவன் இல்லையாப்பா?’ என்று கேட்டார்.

மாதவனுக்கு சொல்ல முடியாத பயம் ஏற்பட்டது. என்னவோத் தெரியலே என்று மனத்திற்குள்ளாகவே நினைத்தான். ஆனல் அவன் உதடுகளிருண்டும் குளிரைத் தாங்க முடியாது தடதட வென்று ஆடாமலில்லை. அவன் கால்களிரண்டும் நடுக்கமுற்றன.

மாதவனா? அவர் இங்கில்லீங்களே வந்து வந்து அவருக்கு என்னுங்க வந்திருக்கு? சம்மன்கிம்மனு வந்திருக்குங்களா? என்றான் மாதவன்.

"என்னப்பா அது அவருக்கு பணம் கொண்டு வந்திருக்கேன். அதாவது லாட்டரி சீட்டுலே மூணுவது பிரைஸ் 3000 ரூபாய் விழுந்திருக்கு அவர் கையெழுத்து இடனும் ஆகையாலே ஆபிசுக்கு வந்து வாங்கிக்க சொல்லறியா?" என்று சொல்லிவிட்டு, திரும்பவும் புறப்பட ஆயத்தமானர்—போஸ்டு மேன்.

"என்னுங்க!...பணமா?...லாட்டரி சீட்டா! அடடே அந்த மாதவன் நான் தானுங்க. என்னமோன்னு நினைச்சி பயத்திலே, வெளியே போயிருக்காருன்னு சொல்லிட்டேனுங்க" என்று அவர் பின்னலேயே ஓடினன் மாதவன்.

போஸ்டுமேன் (சிறித்துக்கொண்டே) அடடே.. நீங்கத்தானு அவரு என்று சொல்லிக்கொண்டே கந்தலே உருவான அந்த பையிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து மாதவன் கையில் கொடுத்துவிட்டு, ஏதோ ஒரு இடத்தைக் காண்பித்து கையெழுத்து இடச்செய்தார் போஸ்டுமேன். பிறகு ரூபாய் நோட்டுகளை எடுத்து எண்ணிக்கொண்டே இருந்தார். அந்த சமயத்தில் மாதவன் கொஞ்சம் தயங்கியவனய் தெருவில் சென்று எட்டி எட்டிப்பார்த்தான். இதைக் கண்ட அந்த போஸ்டுமேன் 'என்னப்பா அப்படி பார்க்கிறே தெருவிலே' என்று கேட்டார்.

தலையை சொறிந்துக்கொண்டே...' இஹி இஹி ஒன்னுமுல்லீங்க தெருவிலே ஏதாச்சும் வண்டிகிண்டி இருக்கானுப் பார்த்தேனுங்க!' என்று பல்லிளித்தவனய்க் கூறினன் மாதவன்.

"எதுக்கப்பா வண்டிபாக்குறே எனக்கு வண்டிபாக்குறியா? சேசே அதெல்லாம் எனக்கு வேண்டாமுங்க" என்றார் போஸ்டு மேன்.

'ஒன்று முல்லீங்க வண்டிப்பசை எடுக்கனுமுங்க வேறெ ஒன்னுத்துக்கு முல்லீங்க!

'வண்டிப்பசையா? அது எதுக்கப்பா இப்போது?

'கையெழுத்துத்தான்...தெரியாதுங்களே! அதுக்கு பசை தடவி கைரேகை இடலாம் முன்னுதான்.

'அடராமசந்திரா! இந்த காங்கிரஸ் கவுருமெண்டிலேக் கூடவா படிக்காதவனயிருக்கே. எத்தனையோ பள்ளிக்கூடங்கள் இருக்கு அதிலே போய் கையெழுத்துப் போடற மட்டுக்கு மாச்சும் கத்துக்கப்படாதா தம்பி, உஹும்.. அது அதுக்கும் அதிர்ஷ்டம் வேண்டாமா. சரி, இங்கே வா கையை நீட்டு (பேனு மைதடவி கையொப்பம் வாங்கிக் கொண்டு அவர் கணக்குப்படி ரூ. 3000-யும் அவன் கையில் கொடுத்துவிட்டு போய் விடுகிறார் போஸ்டுமேன்.)

அது சமயம் எங்கோ சென்று மாதவனின் முதலாளி அங்கே வந்தார். விஷயம் அறிந்த நாயக்கர் சந்தோஷ மிகுதியால் பணத்தை வாங்கி எண்ணிப்பார்த்தார். போஸ்டுமேன் கையாண்ட ரூ. 200 குறைந்தது!

பாவம்! மாதவன் படித்திருந்தால் அந்த 200-யும் போயிருக்குமா? அல்லது கைரேகை தான் இடமுடியுமா? தற்செயலாக அவன் முதலாளி அங்கு வந்ததால் மீண்டும் ரூ. 200 கிடைத்தது மாதவனுக்கு. ஆனல் போஸ்டுமேனுக்கு 4 மாதம் கடுங்காவல் கிடைத்தது!

பணம் பெற்ற மாதவன் இனி 300 ரூபாய்க்கு அதிபதியானன். அதில் 500 ரூபாயை முதியோர் கல்வி நிலயத்திற்கு அன்பளிப்பாக அளித்துவிட்டு, தானும் இரவில் படிக்க ஆரம்பித்தான். அவன் ஊக்கத்திற்கு தகுந்தார்போல் மூன்றே மாதங்களில் கற்றுக்கொண்டான் பேப்பர் படிக்க! அவன் நினைத்தது கைகூடியது. அவன் இனி மக்களுள் ஒருவனக தன்னை நினைத்துக் கொள்வான். இனிவாழ வழி அறிந்து கொண்டான். இனி அவன் தலை நிமிர்ந்து கம்பீரமாய் நடப்பான் என்பதை கூறுதிருக்க இயலாது.

செய்தி சுருள்

முதியோர் கல்வி முகாம்

தென்னாற்காடு ஜில்லா, செஞ்சி தாலுக்கா கப்பளாம்பாடி கிராமத்தில் 1-5-'52 இரவு 8 மணிக்கு ஜில்லா ஆர்கனைசர் திரு. ந. சீதாராமன் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் கூடி கிராமத்தில் ஒரு முதியோர் கல்வி முகாம் ஏற்படுத்த மூடிவு செய்தது. அங்ஙனமே திரு. கே. எஸ். இராமச்சந்திரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு ஒரு முதியோர் கல்வி முகாம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

30 முதியோர்கள் உடனே முகாமில் சேர்ந்தனர். பெட்ரோமாக்ஸ் விளக்கு ஆசிரியரால் இனமாகக் கொடுக்கப்பட்டது. ஜில்லா ஆர்க்கனைசர் திரு. பி. சீதாராமன் முதியோர் கல்வி புத்தகங்கள் 8-ம், லாபக் சார்ட்டுகள் 12-ம் நன்கொடையாக வழங்கினர்கள். செஞ்சி தாலூக்கா கமிட்டியின் அங்கீகாரத்திற்காக மனு சமர்பிக்கப்பட்டது.

கோவை நகராட்சி முதியோர் இரவுப்பள்ளி

1952-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 28-ம் தேதியன்று செல்வபுரம் நகராட்சி முதியோர் கல்விப் பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது. அப்பொழுது தேர்ச்சி பெற்ற முதியோர்களுக்கு சர்ட்டிபிகேட்டுகள் வழங்கப்பட்டது. விழாவிற்கு ஷை வார்டு கவுன்சிலர் திரு. எஸ். ஷண்முகம் தலைமை வகித்தார்.

தலைவர் முதியோர் கல்வியின் அவசியம் பற்றி பேசினர். பிறகு நகராட்சி ஆரம்பப் பள்ளி ஆய்வாளர் திரு. கே. ஆர். சுப்ரமண்யம் பிள்ளை அவர்கள் முதியோர் கல்வியின் பயன் என்ற பொருள்பற்றியும், முதியோர் கல்வித் தணிக்கையாளர் திரு. கே. எல். கனகசபாபதி அவர்கள் முதியோர் கல்வியும் பெண் கல்வியும் என்பது பற்றியும் பேசினர்கள்.

பின்னர் கமிட்டி உறுப்பினர் திரு. பி. கே. சதாசிவம் அவர்கள் முதியோர் கல்விக்கு நாம் இன்னும் சிரத்தை கொண்டு ஆள் சேர்க்க வேண்டுமென்றும், அங்கத்தினர்கள் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் சேவை புரிய வேண்டும் என்றும், கல்வி கற்பிக்கும் ஆசிரியரின் சேவையை பாராட்டி பேசினர்.

தலைவர் அவர்கள் பயிற்சி பெற்ற முதியோர்களுக்கு சர்ட்டிபிகேட் வழங்கப்பட்டது. பின்னர் ஆசிரியர் திரு. டி. அங்கமுத்து அவர்கள் அங்குவந்துள்ள அனைவருக்கும் நன்றிகூறினர். பின்னர் நாட்டு வணக்கம் பாடி கூட்டம் இனிது முடிந்தது.

கமிட்டியாரால் பள்ளியில் பயின்று வந்த முதியோர்களுக்கு ஒரு தேனீர் விருந்து நடைபெற்றது.

ஸ்ரீ பாரதி இலவச இரவு பாட்சாலை ஆண்டு விழா.

1952-ம் வருடம் மே மாதம் 3-ந்தேதி சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு ஸ்ரீ பாரதி இலவச இரவு பாடசாலையின் ஆண்டு விழா திரு. சி. ஆர். ராமசாமி, எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் திரு. டி. ஜே. ஆர், கோபால் அவர்கள் கட்டாய முதியோர் கல்வி இயக்கம் வருகிறவரையில் முதியோர் கல்வி வெற்றியடையாது என்றும், மதுவிலக்கு, ஆலயபிரவேசம் முதலியனவற்றை அரசாங்கம் சட்டத்தின் மூலமாக கொண்டு வந்ததின் பேரில் இன்று அவைகள் கொஞ்சம் கொஞ்சமாக வெற்றி ஏற்பட்டு வருகிறது என சுட்டிக் காட்டினர். அப்போது அப்பாடசாலையின் காரியதரிசி வாசித்தளித்த அறிக்கை வருமாறு :

இக்கிராம வாசிகளுடைய பிள்ளைகளுக்கு வீட்டில் படிப்பதற்கு வேண்டிய வசதிகள் இல்லாமையினால் அவர்களுக்கு கல்வியை இரவில் போதிப்பதற்கு அவசியம் ஏற்பட்டு இருக்கிறது. இதைக் கருதி இப்பள்ளியில் முதல் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்புவரை படிக்கும் மாணவ மாணவிகளுக்கு கல்வியை இலவசமாக போதித்து வருவது எமது நோக்கம். இப்பள்ளியின் மாணவ மாணவிகளுக்கு வெள்ளிக்கிழமை தோறும் திருப்புகழ் தேவாரம், திருவருட்பா, தேசிய கீதம் முதலியவைகளை கற்றுக்கொடுக்கிறோம். மேலும் மாம்பலம் ஸ்ரீ அனுமான் ராட்டைக் கழக அங்கத்தினர்களின் உதவியினால் விடுமுறை நாட்களில் மாணவ மாணவிகளுக்கு நூல் நூற்பதற்கான பயிற்சியையும் அளித்து வருகிறோம்.

பாடசாலை நடக்கும் முறை

தற்போது 65 பிள்ளைகள் இப்பள்ளியில் கல்வி பயின்று வருகின்றனர். அடுத்த ஆண்டு பிள்ளைகளின் தொகை இன்னும் அதிகரிக்கும் என்று நம்புகிறோம். பெற்றோர்களும் தங்களுடைய கடைமையை உணர்ந்து தம் தம் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காகவும் தவராமலும் அனுப்பிவைத்து கல்வி பயில செய்யும்படி வேண்டிக் கொள்கிறோம். ஸெகண்டரி கிரேடு போதனை முறையில் தேர்ச்சிபெற்று உள்ள இரண்டு நண்பர்களின் உதவியாலும் மற்றும் சில இளைஞர்களின் உதவியாலும் இப்பள்ளியில் வாசிக்கும் மாணவ மாணவிகளுக்கு அன்றாடக் கல்வியை போதிக்கப்பட்டு வருகிறது. இந்த நண்பர்களின் ஒத்துழைப்பு இப்பள்ளிக்கு எப்பொழுதும் இருக்குமென்று நம்புகிறோம்.

இப்பொழுது இவ்வருடாண்டு விழாவில் தலைமை வகிக்கும் திரு. சி. ராஜம் ராமசாமி அவர்கள் 20-12-51-ல் நம்முடைய பள்ளிக்கூடத்தை பார்வையிட நேர்ந்தது. அச்சமயம் அவர் இப்பள்ளியின் பார்வையாளர், புத்தகத்தில் பின் வருமாறு எழுதியுள்ளார்.

"நான் இன்று இந்தப் பள்ளியை பார்வையிட நேர்ந்தது. சிறுவர்களின் கல்விக்காக ஊக்கமுள்ள சில இளைஞர்கள் பாடு படுவதைப் பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளிக்கூடம் இவர்கள் முயற்சியினால் வெகு விரைவில் மேம்பாடு அடையுமென்று நம்புகிறேன்"

முதியோர் கல்வி நிலையம்

இக்கிராமத்திலுள்ள எழுத்தறிவிலா முதியோர்கள் சிலரின் வேண்டுகோளுக்கிணங்கி சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் தேதி இப்பள்ளிக்கூடத்தில் முதியோர் கல்வி நிலயம் ஒன்று ஏற்படுத்தியுள்ளோம். இப்பள்ளியில் இப்பொழுது 18 வயது முதல் 45 வயதுள்ள 25 முதியோர்கள் கல்வி பயன்று வருகிறார்கள். முதியோர் கல்வி போதனை முறை பயிற்சி பெற்ற திரு. சி. வைத்தி அவர்களின் உதவியாலும் திரு. சுந்தரம், ஹரிதாஸ், பாபு அவர்களின் உதவியாலும் இம் முதியோர்களுக்கு இரவு 8-30 மணி முதல் 10 மணி வரை கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. இவ்வைந்தாறு மாதங்களுக்குள் இம் முதியோர்களில் பலர் நன்றாக எழுதவும் படிக்கவும் தேர்ச்சி பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இவர்களைப் போல இக்கிராமத்திலுள்ள எழுத்தறிவிலா முதியோர்கள் இப்பள்ளியில் சேர்ந்து இவ்வறிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இம் முதியோர் கல்வி நிலயத்தின் சார்பாக இவ் ஆண்டு மார்ச்சு மாதம் 23-ந் தேதியன்று சர்க்கார் முதியோர் கல்வி இலாகா உதவியினால் "சுகாதாரம்" என்ற விஷயத்தைப் பற்றி திரைப்படம் ஒன்றும் 24-ந் தேதியன்று மிருகங்களின் துன்ப நிவாரணச் சங்கம் (S.P.C.A.) உதவியினால் "ஜீவ காருண்யம்" என்ற விஷயத்தைப் பற்றி திரைப்படம் காண்பிக்கப் பட்டது. இம் மாதம் 30-ம் தேதியன்று அமெரிக்கச் செய்தி இலாகாவின் சார்பினால் இந்நிலயத்தில் "சுகாதாரம்" "ஒழுக்கம்" என்னும் விஷயங்களைப் பற்றி திரைப்படம் ஒன்று காண்பிக்கப்பட்டது.

சென்ற மார்ச்சு மாதம் 31-ந் தேதியன்று எழும்பூர் கிளைக் கல்வி இலாகா உதவி இன்ஸ்பெக்டர் திரு. வில்வராய் அவர்கள் இம் முதியோர் கல்வி நிலயத்தை பார்வையிட்டு இப்பள்ளிக்கு உதவியளிக்கும்படி சர்க்காருக்கு சிபார்சு செய்துள்ளார்.

பிறகு ஜமீன்தார் என்ற நாடகத்துடன் கூட்டம் முடிவுற்றது.

முதியோர் கல்விக்கூடம் முதலாவது ஆண்டு விழா, புத்தனம்பட்டி

புத்தனம்பட்டி முதியோர் கல்விக் கூடத்தின் முதலாவது ஆண்டுவிழா 30-4-'52 புதன் கிழமை இரவு திருச்சி பிரபல ஹாஸ்ய எழுத்தாளர் திரு. எஸ். "சுகி" அவர்கள் தலைமையில் நடைபெற்றது அவ்வமயம் திருச்சி பேராசிரியர் திரு. எம். நடராஜன், M.A. அவர்கள் "எதிர்கால இந்தியா" என்பது பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார். திருச்சி திரு. டி. கே. சீனிவாசன் அவர்கள் "வள்ளுவர் காட்டிய வழி" என்பது பற்றி பேசினார். துறையூர் வட்டப்பள்ளித்துணை ஆய்வாளர் திரு. எஸ். வெங்கட்டராமன், B.Sc., B.T. அவர்கள், இளந்துணை ஆய்வாளர் திரு. டி. எஸ். கோவிந்தராவ் அவர்கள் "குழந்தை

உள்ளம்" "முதியோர் கல்வியின் அவசியம்" என்பது பற்றி முறையே பேசினார்கள். முதியோர் கல்விக்கூட மாணவர்களால் முதியோர் கல்வியின் நாட்டுப் பாடல்கள், முதியோர் கல்விப் பிரச்சாரத்தைப்பற்றிய ஓர் சிறிய சம்பாஷணை முதலியவைகள் நிகழ்த்தப் பட்டன. முதியமாணவர்களுக்கு இவ்வூர் நேரு உயர் நிலைப்பள்ளி தலைமையாசிரியர் உயர்திரு. வித்துவான் எஸ். சோமசுந்தரம் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. 25-4-52-ல் துறையூர் வட்டப்பள்ளி இளந்துணை ஆய்வாளர் அவர்களால் நடத்தப்பட்ட பரீட்சையில் தேர்ச்சிபெற்ற 3 முதிய மாணவர்களுக்கு தகுதிப் பத்திரங்கள் (Adult Literacy Certifice) துறையூர் வட்டப் பள்ளி இளந்துணை ஆய்வாளர் திரு. டி. எஸ். கோவிந்தராவ் அவர்கள் கொடுத்ததைப் பெற்று, உயர்திரு. வித்துவான் எஸ். சோமசுந்தரம் அவர்கள் வழங்கினார்கள். முதியோர் கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியர் திரு. எஸ். ரெங்கசாமி நாயுடு அவர்கள் முதியோர் கல்விக் கூட்டத்தின் ஆண்டு அறிக்கையைப் படித்தார். இரவு நடைபெற்ற திரு. ஜே. டி. செல்வ இரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட "அண்ணன்" என்ற நாடகத்தில் முதிய மாண மாணவர்களும் கலந்து நடித்தது மிகவும் குறிப்பிடத்தக்கது. கடைசியாக தலைவர் முடிவுரைக்குப் பின் முதியோர் கல்விக் கூடத்தின் நிர்வாகஸ்தர் திரு. எஸ். சுந்தராமன் அவர்களால் நன்றி கூறப்பட்டு நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

தென்னிந்திய முதியோர் கல்வி சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட கௌரவ மாவட்ட நிர்வாகஸ்தர்கள்—(தொடர்ச்சி)

கடப்பை

திரு. வி. வீரபிரம்மம்,
"ஆனந்தாஸ்ரமம்", கடப்பை.

கீழ் கோதாவரி

திரு. என். ராஜாராவ்,
கஸ்டம்ஸ் ரோட்,
காக்கினடா.

திருவாங்கூர், கொச்சி, மலபார்

திரு. எம். கிருஷ்ணன்குட்டி நாயர்,
ஒய். எம். சி. ஏ. ரோட்,
கோழிக்கோடு.

திருச்சி

திரு. பி. ஜே. லூயிஸ்,
38, மார்கெட் சந்து,
ஹிருதயபுரம்,
திருச்சி.

(மற்ற மாவட்டங்களுக்கு பிறகு அறிவிக்கப்படும்)

மதுரை மாவட்ட கூட்டம்.

1952-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 12-ந்தேதி அன்று முதலாவது மதுரை மாவட்ட கமிட்டி கூட்டம் திரு. என். எஸ். அருணாசலம், (மதுரை ஜில்லா கலெக்டர்) தலைமையில் கலெக்டர் பங்களாவில் நடைபெற்றது. அவ்வமயம் தொண்டர்களும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் கலந்து கொண்டனர். அவர்கள் வருமாறு; திரு. ஆர். நாகராஜ், திரு. எஸ். பாலசுப்பிரமணியம், திரு. டி. ஆர். ராகவன், திரு. ஏ. அய்யனார் எம். எல். ஏ. திரு. ஆர். வி. ருட்ரப்பசாமி, (கல்வி இலாக்கா அதிகாரி) திரு. ஜெ. ஜெ. முத்தையா, திரு. சேஷய்யர், திரு. எஸ். கே. குப்புசாமி, திரு. வி. பத்மனாபன், (காந்தி கிராமம்) திரு. பி. எஸ். கந்தசாமி.

பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கம் மதுரை மாவட்டத்திற்கு ஒதுக்கியிருக்கும் பணத்தை சீக்கிரம் அனுப்ப வேண்டுமென்று இந்த கமிட்டி கேட்டுக்கொள்ளுகிறது.

2. வருகிற மே மீ 17-18-ந்தேதிகளில் கோழிக்கோடில் நடைபெறவிருக்கிற தென்னிந்திய முதியோர் கல்வி சங்கத்தின் எட்டாவது மகாநாட்டிற்கு திரு. டி. ஆர் ராகவன், திரு. வி. பத்மனாபன், திரு. ஏ. அய்யனார் முதலானோர்களை பிரதிநிதிகளாக அனுப்புவதென முடிவு செய்யப்பட்டது.

3. ஒவ்வொரு தாலுக்காவிலும், ஓர் நிர்வாகஸ்தர்களை பொறுக்கி எடுக்க, ஜில்லா கலெக்டரையும், கல்வி அதிகாரியையும், அவர்களுடைய உத்தியோக இலாக்கா மூலம் உதவி செய்யும்படி இக்கமிட்டி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. முதியோர் கல்வி முகாம் போன்ற முதியோர் கல்வியை பரப்பவேண்டிய விஷயத்தை ஆலோசித்து முடிவுபெற ஓர் உப-கமிட்டியை இக்கமிட்டி நியமிக்கிறது அது வருமாறு; திரு. ஆர். வி. ருட்ரப்பசாமி, திரு. வி. பத்மனாபன், திரு. எஸ். பாலசுப்பிரமணியம், (எம். பி.) திரு. டி. ஆர். ராகவன்.

(தொடர்ச்சி 176-ம் பார்க்கவும்)

இரண்டாம் பகுதி

தமிழ் மக்கள்

பண்டைத் தமிழ் மக்கள்

தமிழ் மொழி பேசப்படும் நாடு தமிழ் நாடாகும். தமிழ் நாட்டில் வாழ்பவர்கள் தமிழர்கள் எனப்படுவார்கள். பண்டை காலத்துத் தமிழர்கள் அறிவில் சிறந்தவர்களாயும் மனிதத்தன்மை நிரம்பியவர்களாயும் இருந்தார்கள். அதாவது அவர்கள் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக ஒருபோதும் நடவார்கள். மனிதத் தன்மை உடையவர்களை மக்களென்றும், இல்லாதவர்களை மாக்களென்றும் பழந் தமிழர்கள் அழைத்து வந்தார்கள். கல்வி அறிவு இல்லாதவர்களும் விலங்கினத்தில் சேர்க்கப் பட்டனர்.

வாழ்க்கை

தமிழர்கள் தங்கள் உடல், உள்ளம், உயிர் மூன்றையும் நன்ருகக் காப்பாற்றி வந்தார்கள். உடல் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது உண்ண உணவு. உணவு உழவினுல் வருவது. உலகத்தில் நடைபெறும் பலவிதத் தொழில்களுக்கும் உழவே ஆதாரம் என்பதைத் தமிழர்கள் அறிந்து இருந்ததனுல் அவர்கள் அத்தொழிலை முதன்மையாகக் கருதினுர்கள். உழவுத் தொழிலைச் செய்து வந்த வேளாளர்கள் மிகவும் மேன்மையாகப் பாராட்டப்பட்டனர். அக்கால வேளாளர்களுக்கு மரியாதைப் பட்டங்கள் கொடுக்கப்பட்டன. அவர்கள் அரசர்களுக்கு ஆலோசனை சொல்லும் மந்திரிகளாகவும் அரசர்களுக்குத் தங்கள் பெண்களைக் கலியாணம் செய்து கொடுக்கும் நிலைமையிலும் இருந்தார்கள்.

உள்ள வளர்ச்சிக்கு வேண்டியது அறிவாகும். அந்த அறிவு கல்வியால் விருத்தியாகிறது. அக்காலத்தில் மக்களில் அநேகம் பேர் கல்வி அறிவு உடையவர்களாய் இருந்தனர். தன் மகனுக்குக் கல்வி கற்பிப்பது தந்தையின் முதற் கடமையாக இருந்தது. அக்காலத்துக் கல்வி பாடம் சொல்லுமுறை கேட்குமுறை என்று பிரிக்கப்பட்டு இருந்தது. கல்வி போதிக்கும் உபாத்தியாயர் உயர்வாக மதிக்கப்பட்டார். அப்படியே புலவர்களும் நன்ருகப் போற்றப்பட்டனர். பல புலவர்கள் அடிக்கடி ஒன்றுகூடி நூலாராய்ச்சி நடத்தினர். புலவர் கூடிய சபைக்குச் சங்கம் என்று பெயர். பண்டைத் தமிழகத்தில் பல சங்கங்கள் இருந்தன. அரசர்கள் புலவர்களை ஆதரித்தது அல்லாமல் தாங்களும் கல்வியில் சிறந்தவர்களாயிருந்தனர்.

இப்படிப்பட்ட கல்வியில் பெண்களும் சிறந்திருந்தனர். அவர்களில் ஔவையார், வெண்ணிக்குயத்தியார், பெருங்கோப்பெண்டு, பாரிமகளிர், பொன்முடியார், காக்கைபாடினியார், நச்செள்ளையார் என்பவர்கள் சிலர்.

உயிர் வளர்ச்சிக்கு அறத்தை அதாவது தருமத்தை முதலாவதாகக் கொண்டனர். தருமம் பலவகைப் பட்டதாயினும் அவற்றில் ஈகையை அதாவது கொடுத்தலைப் பெரிதும் பாராட்டினர். அக்காலத்து அரசர்கள் ஈகையில் சிறந்திருந்தார்கள். அரசர்களைப் போலவே குடிமக்களும் இருந்தனர். ஒருவர் யாசித்த பொருளை கொடுக்க வசதியில்லாமல் இருத்தலே

எல்லாவகைத் துன்பத்திலும் மேற்பட்ட துன்பம் என்று அவர்கள் நினைத்தார்கள். ஈகைக்கு அடுத்தபடியாக ஒழுக்கத்தை எண்ணினர். பொய் சொல்லாமை நன்றியறிவு ஆகிய நற்குணங்களும் தமிழர்களிடத்தில் நிறைந்திருந்தன.

நாகரீகம்

ஒரு நாடு நாகரீகத்தில் உயர்ந்திருப்பதற்கு அந்நாட்டின் வியாபாரம், அரசியல், கலைகள், வீரம், புலமைத்திறம் ஆகியவைகளே காரணங்களாகும்.

நகர அமைப்பு

தமிழ் நாட்டில் அக்காலத்தில் பல நகரங்கள் இருந்தன. அவைகள் உயர்ந்த நாகரீக முறையில் அமைக்கப்பட்டிருந்தன. ஒழுங்கான வீதிகளும், முடுக்குத் தெருக்களும், முச்சந்தி, நாற்சந்தி, ஐஞ்சந்தி என்னும் சந்திகளும், அம்பலம், மன்றம் முதலிய பொது இடங்களும் இருந்தன. நகரத்தில் வரும் சாக்கடை நீர் பூமிக்கு அடியில் ஓடும்படி செய்யப்பட்டிருந்தது. வேண்டும்போது நீரைக் கொண்டு வருவதும், வேண்டாதபோது போக்கியும் விடும் யந்திரங்களும், மாலையில் நகர ஜனங்கள் உலாவுவதற்கு சோலைகளும், பல வகைக் கோயில்களும் இருந்தன.

அரசியல்

அரசர்கள் தங்களுக்குக் கிடைத்த அதிகாரம் குடிகளுக்கு நன்மை செய்வதற்கே என்று உணர்ந்திருந்தனர். குடிகளால் தூற்றப்படுவதற்கு அவ்வரசர்கள் மிகவும் அஞ்சினர்கள். குடிகளுக்கு நன்மை தரும் செயல்களை ஆராய்ந்து செய்தனர். உழவிற்குப் பயன்படக் கூடிய நீர் நிலைகளை அமைத்தார்கள். குடிகளிடமிருந்து ஆறிலொரு பங்கு வரி வாங்கி அவ்வரியைக் குடிகளின் நன்மைக்காகவே செலவழித்தனர்.

வழக்குகளைத் தீர்த்து நியாயம் கூறுவதிலும் பண்டைத் தமிழ் அரசர்கள் நடுநிலைமை தவறாமல் இருந்தனர். தீர்ப்புக் கூறும் சபையில் அறிவிலும் அநுபவத்திலும் முதிர்ந்த பெரியோர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

வியாபாரம்

அக்காலத்தில் உள்நாட்டு வியாபாரமும் வெளிநாட்டு வியாபாரமும் நன்றாக நடந்து வந்தன. கப்பல் வியாபாரம் செழித்திருந்தது. கடற்கரையில் துறைமுகங்களும், கலங்கரை விளக்கங்களும் (லைட்ஹவுஸ்) இருந்தன. இறக்குமதி செய்யும் பொருள்களுக்கும், ஏற்றுமதி செய்யும் பண்டங்களுக்கும் சோழருடைய புலிப்பொறியாகிய முத்திரையையிட்டனர். அப் பண்டங்களுக்குச் சுங்கம் வாங்கி வந்தனர். கப்பல்கள் மூலம், யானை குதிரைகளும் வெளி நாட்டிலிருந்து வரவழைத்தனர்.

நகரங்களில் பெரிய அங்காடிக் கடைகள் இருந்தன. உள்நாட்டு வியாபாரத்திற்கும் சுங்க வரி உண்டு. அந்நாளில் வாணிபர் உயர்ந்த நிலையில் இருந்தனர். அவர்கள் லாபத்தை வெளிப்படையாகச் சொல்லி நேர்மையுடன் வியாபாரம் செய்தனர்.

(தொடரும்)

மூன்றும் பகுதி

மாதர் பகுதி

புடலங்காய் போண்டா

புடலங்காய் கட்லட்டுக்குத் தேவையான சாமானோடு 2 வெங்காயமும், கடலை மாவும் எடுத்துக்கொள். உருளைக்கிழங்கு பொடி மேலே சொன்னபடி தயாரித்து வெங்காயத்தை துண்டுகளாக்கி சேர்க்கவும். $1\frac{1}{2}$ அங்குல வளையங்களாக புடலங்காயை நறுக்கி உருளைக்கிழங்கு கறியால் நிரப்பவும் கடலைமாவுடன் நீர் கலந்து கரைத்து கொஞ்சம் உப்பு, $\frac{1}{2}$ டீஸ்பூன் மிளகாய்த்தூள் கலந்து வளையங்களை அதில் முக்கி எண்ணெயில் வறுக்கவும்.

ஊர்ஸ்டர் சாஸ்

தேவை :—20 பல் பூண்டு, $1\frac{1}{2}$ அங்குலம் பச்சை இஞ்சி, 8 வத்தல் மிளகாய், 12 கிராம்பு 4 அவுன்ஸ் வெங்காயம், 1 பவுண்டு சர்க்கரை 1 பாட்டில் காடி, 2 டீஸ்பூன் மிளகுத்தூள் உப்பு ருசிக்கு அளவு.

முறை :—சர்க்கரை நீங்கலாக மீதி எல்லாவற்றையும் காடியில் அறைக்கவும். 2 மேஜைக் கரண்டி சர்க்கரை கருகும்படி வருக்கவும். அடுப்பைத் தணித்து காடி, சாந்து மீதி சர்க்கரை எல்லாவற்றையும் சேர்த்து அடுப்பிலிடவும். சுமார் 20 நிமிஷங்கள் வேகவைக்கவும் ஆறினபிறகு பாட்டிலில் அடைத்து வைக்கவும்.

பப்பாளி

முரடாக இருக்கும் மாமிசத்தைப் பதம் செய்ய பப்பாளி இலையில் முதல் நாள் இரவிலே சுருட்டி வைப்பதுண்டு. அவ்வாறு செய்வதினால் அது மிருதுவடைகிறது. சில சமயங்களிலே மாமிசம் சேர்ந்த குழம்புகளில் மாமிசம் மிருதுவாகாமலிருந்தால் ஒருதுண்டு பப்பாளிக்காயைச் சேர்க்கவும்.

புடலங்காய் விதை தோசை

தேவை :—2 கைப்பிடியளவு புடலங்காய் விதை, $\frac{1}{4}$ சேர் அரிசி, $\frac{1}{2}$ தேங்காய் 6 மிளகாய் வத்தல், 2 வெங்காயம், 1 சிறு எலுமிச்சம் பழம் அளவு புளி உப்பு ருசி அளவு.

முறை :— தேங்காய்த் துறுவி எடுக்கவும். அரிசியை 1 மணி நேரம் ஊர வைத்து பிறகு அரிசி, தேங்காய், மிளகாய், புளி எல்லாவற்றையும் சேர்த்து அரைக்கவும். கொஞ்ச நேரம் கழித்து விதைகளைச் சேர்த்து மாவாகும்படி அரைக்கவும். வெங்காயத்தைத் துண்டித்து அதோடு சேர்க்கவும், உப்பு சேர்க்கலாம். சாதாரண தோசை போல சுடவும்.

முட்டை

தேவை :—4 முட்டை, 2 வெங்காயம், 2 பூண்டு, இஞ்சி, 1 டீஸ்பூன் மஞ்சள் பொடி $\frac{1}{2}$ ஸ்பூன் மிளகாய்த்தூள், 1 டீஸ்பூன் சர்க்கரை உப்பு ருசிக்கு அளவு.

முறை :—முட்டையை நன்ருக வேக வைத்து நாலாபக்கமும் அதைக் கீறவும். 1 வெங்காயம் நறுக்கி இஞ்சி பூண்டு இவைகளுடன் அறைக்கவும். இரும்புச்சட்டியில் எண்ணெய் விட்டு நறுக்கி வெங்காயத்தையும் மசாலாவையும் பொறிக்கவும். இப்பொழுது முட்டை, சர்க்கரை, கொஞ்சம் மோர் இவைகளைச் சேர்த்து இளவறுவலாக வேக வைக்கவும்.

இராமீன் கட்லட்

தேவை :—6 பெரிய இராமீன், 2 வெங்காயம், 1 துண்டு இஞ்சி உப்பு ருசிக்களவாக $\frac{1}{4}$ கரண்டி மிளகாய்த்தூள், 1 முட்டை காய்ந்த ரொட்டித்துண்டுகள் நல்லஎண்ணெய்.

முறை :—இராமீனை சுத்தம் செய்து நீளத்துண்டுகளாக அறுக்கவும், அறுத்த துண்டுகளை நடுவில் லேசாக பிளக்கவும். வெங்காயத்தையும் இஞ்சியையும் மாவாக அறைக்கவும். ருசிக்களவாக உப்பைச் சேர்க்கவும். இந்த இராமீனில் மேல் இந்த சாந்தைத் தடவி நன்ருக அடித்த முட்டையில் முக்கி எடுத்து ரொட்டித் துண்டுகளால் போர்த்தி முறுகலாகும்படி எண்ணெயில் போட்டு பொறிக்கவும்.

(தொடரும்)

முதியோர் கல்வி கீதம்

தென்புத்தூர்—வி. சக்திவேல்

(மெட்டு :—அன்னையும் தந்தையும் தானே என்றபடி)

பல்லவி

முதியோர் கல்வியும் வந்ததினாலே—நாம்
முன்னுக்கு வருவது நிச்சயமே (முதி)

அனுபல்லவி

கல்லாமை யாகிய பேயை—பள்ளி சென்று
கட்டாயமாகவே ஓட்டிடுவோம் (முதி)

சரணம்

கடிதம் வாசிக்கக் கற்றுக் கொள்வோம்—பெரிய
கல்வியை நாமுமே கற்றுக்கொள்வோம்—தினம்
சலியாமலே பள்ளி சென்று—ஆசான்
சொல்வதை நாமுமே கற்றுக்கொள்வோம் (முதி)

கற்றவர் நம்மையே கேவலமாக—இனி
கழித்துமே பேசி இழித்திடாரே—நாமும்
உலகிலோர் மனிதனாகவே வாழ்ந்திட
கல்வியை நாமும் கற்றுக்கொள்வோம் (முதி)

வாருங்கள் பாருங்கள் நண்பர்களே—நின்று
வாராமலேனோ இருக்கிறீர்கள்—நமக்கு
வருந்தியே வந்திடும் கல்வியை—நாமும்
வாசிக்காமலே போகலாமா (முதி)

காதினால் மாத்திரம் கேட்டிடாமலே—நீங்கள்
வந்துமே கல்வியை கற்கவேண்டும்—உங்கள்
வாழ்வினிலே ஒரு தாழ்வு வராமலே
வாசிக்கவே வந்து சேருங்களே (முதி)

Regd. No. M. 5907.

தென்னிந்திய முதியோர் கல்விக் கூட்டுறவு பதிப்பகம்,
லிமிடெட்.

தலைமை காரியாலயம் :

2/21, முதல் லயன் பீச் ரோட், சென்னை-1.

போன் : 3879.

*

முதியோர் கல்வி இயக்க வெளியீடுகள்

தமிழ்

			ரூ.	அ.	பை
தமிழ்படி (முதல் இதழ்)	...	...	0	3	0
,, (இரண்டாம் இதழ்)	...	...	0	3	0
,, (மூன்றும் இதழ்)	...	...	0	3	0
ஹோம் சார்ட்	...	...	0	2	0
கிராம சுகாதாரம்	...	...	0	1	0
இயற்கை இயந்திரம்	...	...	0	1	0
அரசாங்கத்தாரின் வெளியீடுகள் (9 புத்தகங்களடங்கிய செட்)		...	1	2	0
தனிப்பிரதி	...	...	0	2	0
எலிசபெத் பிரை அம்மையார்	...	...	0	1	0
மாரி க்யூரி	...	...	0	1	0
பாரதியார் பாமணிகள்	...	...	0	4	0
,, காலிகோ அட்டை	...	...	0	8	0

தெலுங்கு

அரசாங்கத்தாரின் வெளியீடுகள் (11 புத்தகங்களடங்கிய செட்)		...	1	14	0
ஹோம் சார்ட்	...	...	0	1	6
பெரிய சார்ட்	...	...	0	6	0

மற்றும் மலேயாள சார்ட்கள், முதியோர் கல்வி இயக்க விளம்பரங்கள் முதலியவைகள் கிடைக்கும். அதிகமாக ஆர்டர் கொடுப்பவர்களுக்கு தக்க கமிஷன் தரப்படும்.

மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

G. ஹரிசர்வோத்தம ராவ்,
தலைவர்.

டி. ஜே. ஆர். கோபால்,
காரியதரிசி.

Edited and Published by Sri T. J. R. Gopal for S.I.A.E.A. at 2/21, First Line Beach, Madras-1 and Printed by Sri S. Sundaresan, L.P.T., at the Central Co-operative Printing Works, Ltd., 1/17, Mount Road, Madras—750-5-'52.